களில் இதனையும் புகுத்துவது பொருத்தமாக இருக்கும். அதுவரை இது போலச் செய்வதை நான் சரியான ஒன்றாகக் கருதவில்லை. கிராமப் பகுதி களில்—குறைந்த செலவில் பெரிய அளவு நன்மை பயக்கும் ஒரு திட்டமாக ஹோமியோபதி கருதப்படுவதால், மத்திய அரசின் ஆலோசனை கவனிக்கப் பட்டு தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் இந்த ஹோமியோபதி டாக்டர் களைப் பயன்படுத்திக்கொள்கிற திட்டம் உருவாக்க முயற்சிக்கப்படும்.

திரு. அ. தேவேந்திரன் : இத்தகைய கல்லூரிகளை மிகவும் பின்தங்கிய தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் கூறுகிற இரண்டு தவறான கருத்துக்களை நான் ஏற்கத் தயாராயில்லை. கல்லூரிகளை அரசாங்கம் ஆரம்பிப்பதாகச் சொல்லவில்லை. அடுத்து தஞ்சை மாவட்டத்தை மிகவும் பின்தங்கிய மாவட்டமாகவும் நான் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

* 32 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள ஹோமியோபதி டாக்டர்களின் புள்ளிவிவரத்தினை அரசு சேகரித்து வருகின்றதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

ஆனால் ஓமியோபதி மருத்துவர்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டுள்ளனர். 1969-ம் ஆண்டு முடிய அவ்வாறு பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 12,603.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஓமியோபதி டாக்டர்களுக்கு தற்போது அரசு அளித்து வரும் உதவிகளை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதுவரையில் அரசு அப்படி ஒரு உதவி செய்தது இல்லை. செய்கிற ஏற்பாடு எதுவாயினும் இனி மேல்தான் உருவாகவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவத் துறையில் போதுமான அறிவு பெறாமலே சிலர் டாக்டர் என்ற பட்டத்தை சூட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இந்த ஓமியோபதியில் டாக்டர் என்ற பட்டத்தை சூட்டிக்கொள்ள குறைந்தபட்சம் ஓமியோபதி மருத்துவத் துறையில் இன்ன அறிவு பெற்றிருக்க வேண்டுமென்ற நிபந்தனையை அரசாங்கம் விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொதுவாக அறிவுக்கு தனியாக அளவுகோல் கிடையாது. இந்தத் துறையில் அறிவை அனுபவத்தின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கலாம். ஓமியோபதி துறையிலே யார் யார் பணியாற்றலாம் என்று நாம் கொண்டு வந்திருக்கிற சட்டத்தின்படி 10 ஆண்டுக் காலம் இந்தத் துறையிலே ஈடுபட்டு பணியாற்றியவர்களாக இருக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. இதற்குமேல் 3, 4 ஆண்டு என்று பயிற்சி பெற்றுள்ளவர்கள் ஒரு தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது. இந்த முறைப்படி, ஓமியோபதி கவுன்சில் அவர்களுடைய தகுதியைப் பார்த்து, அவர்களைப் பணியாற்றுவதற்குரிய தகுதி உள்ளவர்களாக ஏற்றுக்கொள்ளும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : அலோபதியிலே பயிற்சி பெற்ற டாக்டர்களுக்கு இந்த ஓமியோபதியிலே அறிவு இருந்தால் சற்று நலமாக இருக்கும். அதற்காக, அலோபதி முறையைப் படிக்கும்போதே, கல்லூரியிலேயே இந்த ஓமியோபதி பற்றிய அறிவையும் சேர்த்துக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொதுவாக, அலோபதி முறையிலே தேர்ச்சி பெற்றவர்களும், அந்தத் துறையினுடைய பெரிய நிபுணர்களும் ஓமியோபதி முறையை முழு அளவிற்கு ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நிலையில், இந்தப் பாடத் திட்டத்தோடு அந்தப் பாடத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ளக் கூறுவது முறையானதாக இருக்காது என்று அரசு கருதுகிறது. அந்தக் கல்வித்துறை நிபுணர்கள்தான் இதற்கு முடிவு காணமுடியுமே தவிர, அரசாங்கம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது. ஆனால் ஒரு துறையிலே தேர்ச்சி பெற்றவர்கள் இன்னொரு துறையிலே தேர்ச்சி பெறவிரும்பினால் அதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : மறைந்த டாக்டர் குருசாமி அவர்கள் அலோபதி முறையைத் தவிர, ஓமியோபதி முறையிலும் சிறந்த நிபுணராக இருந்த காரணத்தால்தான் அவர் திறமையான டாக்டர் என்ற பெயர் பெற்றார். எனவே, அலோபதி டாக்டர்கள் ஓமியோபதி கல்வியைக் கற்றுக் கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டாக்டர் குருசாமி அவர்கள், அலோபதியில் சிறந்தவராக இருந்தார். தவிர, அவர் சித்த வைத்தியத்திலேயும் சிறந்தவராக இருந்தாரே தவிர, ஓமியோபதியில் அல்ல. அங்கத்தினர் அவர்கள் இரண்டிற்கும் வேற்றுமை தெரியாமல் சொல்லி விட்டார்களோ என்று ஐயுறுகிறேன்.

திரு. அ. தேவேந்திரன் : ஓமியோபதி முறையைத் தவருக உபயோகித்தால்கூட, அதனுல் ஆபத்து இல்லை என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படி ஒரு கருத்து இருக்கிறது. ஆனுல் அந்தக் கருத்தைத் தெரிவிப்பது தீங்கு விளைவிக்கும்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல பேர் ஓமியோபதி வைத்தியம் பாஸ் செய்துவிட்டு, கிராமங்களில் டாக்டர் என்று போர்டை போட்டுக்கொண்டு, பெனிசிலின், ஸ்டார்ப்டோமைசின் போன்ற மருந்துகளை எல்லாம் கொடுக்கிருர்கள். இதைத் தவிர்க்க, ஓமியோபதி படித்தவர்களுக்கு தனிப் பட்டமும், அலோபதி படித்தவர்களுக்கு தனிப் பட்டமும் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். இதை அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டாக்டர் என்பது எம்.எல்.ஏ. என்பதைப் போல் ஒரு குறிப்பிட்ட வகையில் பணியாற்று கிறவர்கள் பெற்றிருக்கிற பட்டம். எம்.எல்.ஏ. என்று பொதுவாக குறிப்பிட்டாலும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கிருர்கள். அதே போல், எத்தனையோ துறை இதிலே இருந்தாலும், பயிற்சி பெற்றதன் காரணமாக அவர்கள் டாக்டர்களாக இருக்கிருர்கள்.

Family Planning Campaign

* 33 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware that Panchayat Union Teachers in large numbers staged a walk-out as a protest against Union Teachers being used as agents to procure men for Family Planning Operations in a public meeting attended by the Collector of Tiruchirappalli district at Pudukkottai?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் 23-12-71 அன்று புதுகோட்டையில் தீவிர குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரத்தை முன்னிட்டு நடத்திய ஒரு கருத்துரை கூட்டத்தில் சுமார் 2,000 பேர் கலந்து கொண்டனர். கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது ஒரு சிறு பகுதியினர் சுமார் 50-லிருந்து 100 பேர் அவ்விடத்தை விட்டு வெளியேறினர்.